பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

15 02 2025 6 30

சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாட்டின் பொருளாதாரம் குறித்து, நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தெளிவாக விளக்கம் அளித்திருப்பது பாராட்டுக்குரியது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் மூன்றாவது ஆண்டாக காசி தமிழ் சங்கமம் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் இன்று மாலை தொடங்கியது.
3. தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மத்திய அரசு காலதாமதமின்றி உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.,
4. முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசுகளைக் காட்டிலும் பிஜேபி தலைமையிலான மத்திய அரசுதான் தமிழகத்திற்கு அதிக நிதியை வழங்கி வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.
5. புரோ லீக் ஹாக்கிப் போட்டி புவனேஷ்வரில் இன்று தொடங்கியது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

[]<<<>>>[]

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆற்றிய பட்ஜெட் விவாதத்தின் மீதான பதிலுரையில் நாட்டின் பொருளாதாரம் குறித்து தெளிவாக விளக்கம் அளித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவாக எடுத்துரைத்தது பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்வதையும், மத்திய அரசின் முதலீட்டுச் செலவினம் தொடர்ந்து அதிகரித்து வருவதையும் நிதி அமைச்சர் அவரது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த உரையின் காணொலியை பிரதமர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

**[]<<<>>>[]**

காசி தமிழ் சங்கமம் உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் இன்று மாலை தொடங்கியது.

மூன்றாவது ஆண்டாக நடைபெறும் இந்நிகழ்ச்சியை உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், தகவல் ஒலிபரப்புத்துறை இணை இணை அமைச்சர் திரு எல் முருகன் ஆகியோர் கூட்டாக தொடங்கி வைத்தனர்.

தமிழகத்தின் பாரம்பரிய கலைகளான தப்பாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமிழகத்திலிருந்து ஏற்கனவே எழுத்தாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அடங்கிய முதல் குழுவினர் வாரணாசி சென்றடைந்தனர்.

இந்நிகழ்ச்சி வரும் 24-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

பிரதமரின் கிராம சாலை திட்டம் உள்ளிட்ட மத்திய அரசின் திட்டங்களை முறையாக நிறைவேற்றுவதில் நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் நான்காவது கூட்டத்தில் உரையாற்றிய அவர், அரசின் திட்டங்கள் கடைகோடி பயனாளியையும் சென்றடைவதை மாநில அரசு உறுதி செய்திருப்பதாகக் கூறினார்.

மாநில அரசின் திட்டம், மத்திய அரசின் திட்டம், முந்தைய அரசின் திட்டம் என்றெல்லாம் எந்த பாகுபாடும் இல்லாமல் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

எனினும் குறிப்பிட்ட சில திட்டங்களில் மத்திய அரசின் நிதி கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுவதால் அதன் பயன்கள் மக்களுக்கு சென்றடைவதும் தாமதமாகிறது என்ற அவர் குறிப்பிட்டார்.

எனவே தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மத்திய அரசு காலதாமதமின்றி உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

திட்டங்களை நிறைவேற்றுவதுடன் அவற்றின் சிறப்பான செயல்பாட்டிற்கு குழு உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டுமென்று திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

பிஜேபி தலைமையிலான மத்திய அரசுதான் முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசைவிட அதிக நிதியை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்து இருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில அரசு செயல்படுத்தி வரும் அனைத்து திட்டங்களுமே மத்திய அரசின் நிதி உதவியுடன்தான் நிறைவேற்றப்படுவதாகக் கூறினார்.

பட்ஜெட்டில் தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் நிதி மத்திய அரசின் நிதி பகிர்வு அடிப்படையில் இரண்டு மடங்கு அதிகரித்திருப்பதாகத் தெரிவித்த அவர், இது குறித்து முதலமைச்சர் வெள்ளை அறிக்கை வெளியிட தயாரா என கேள்வி எழுப்பினார்.

மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீடு குறித்து நேருக்கு நேர் விவாதிக்க பிஜேபி தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்த அடிப்படையில் பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்படுவதாக முதலமைச்சர் பேசி வருகிறார் என்பது தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் கணக்கு தணிக்கை துறையிடம் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படுவதில்லை என்றும், அறநிலையத்துறையின் கணக்குகளை வழங்கினால்தான் மக்களுக்கு அது தொடர்பான உண்மை தெரியவரும் என்றும் திரு அண்ணாமலை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கதிரியக்க அதிர்வெண் நீக்கியல் கருவி சேவையை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கருவியின் மூலம் மருந்து, மாத்திரை ஊசிகளால் கட்டுப்படுத்த முடியாத வலிகளுக்கு பக்க விளைவுகள் ஏற்படாமல் சிகிச்சை அளிக்க முடியும் என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) -48--- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று மாநில நாகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்த திரு கே என் நேரு அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரையில் இன்று நடைபெற்ற 11 மாவட்டங்களுக்கு உட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அவர் பேசினார்.

ஆண்டுதோறும் நகராட்சி நிர்வாகத்துறையின் மூலம் 24 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலம் 29 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீர்மிகு நகரத் திட்டம், நகர்புற மேம்பாட்டுத் திட்டம், தூய்மை இந்தியா திட்டப் பணிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருவதாக திரு கே என் நேரு தெரிவித்தார்.

[]<<<>>>[]

தூய்மை இந்தியா இயக்கத்தை தமிழகத்தில் மேலும் சிறப்பாக செயல்படுத்தும் வகையில் மாநிலம் முழுவதும் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதற்காக புதிதாக தயாரிக்கப்பட்ட பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பாடலை மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி இன்று வெளியிட்டார்.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் அனைத்து ஊராட்சிகளிலும் பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் திடக்கழிவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த பாடல் ஒலிபரப்பப்படுகிறது.

இந்த பணியில் 84 ஆயிரத்து 651 தூய்மைப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், ஒன்பதாயிரத்திற்கும் கூடுதலான வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

ஆந்திர மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதன் காரணமாக அங்கிருந்து வேலூர் மாவட்டத்திற்கு வரும் வாகனங்களுக்கு எல்லைப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடிகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றன.

கோழி மற்றும் முட்டைகளை எடுத்து வரும் வாகனங்கள் ஆந்திர மாநிலத்திற்கே திருப்பி அனுப்பப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்டைட் - மோகன் ) --- 53 செகண்ட்*

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புனரமைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை திறந்து வைத்த மாநில அமைச்சர் திரு நாசர், 57 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

[]<<<>>>[]

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தைச் சேர்ந்த 32 வயது பெண்ணுக்கு சிக்கலான முகத்தாடை அறுவை சிகிச்சை மூலம் பிறவி ஊனத்தை சரி செய்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

[]<<<>>>[]

அரியலூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் ஏராளமான இளைஞர்கள் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகளிடையே இயற்கையை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பசுமைப் பள்ளித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி சந்திரகலா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

திண்டுக்கல்லில் வேளாண் விளைப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு கருத்தரங்கம் ஆட்சியர் திரு சரவணன் தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் விடுதியில் தங்கி பயிலும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று நடைபெற்றன.

[]<<<>>>[]

புரோ லீக் ஹாக்கிப்போட்டி புவனேஷ்வரில் இன்று தொடங்கியது.

மகளிர் பிரிவில் இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தியா இரண்டுக்கு — ஒன்று என்ற கோல் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

ஆடவர் பிரிவில் இந்தியா - ஸ்பெயின் அணிகளுக்கு இடையோன ஆட்டம் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ள ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி இன்று துபாய் புறப்பட்டுச் சென்றது.

**[]<<<>>>[]**

நான்காவது தெற்காசிய சீனியர் தடகள சாம்பியன் போட்டி ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில், வரும் மே மாதம் மூன்றாம் தேதி தொடங்கி ஐந்தாம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

சேலத்தில் மாநகர காவல்துறை சார்பில் நடைபெறும் மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டியில் 40 அணிகள் பங்கேற்றுள்ளன.

***<u>End of News</u>***